# விசேட அறிவித்தல்

**இலங்கை சட்டக் கல்லூரி (சாதாரண) நுழைவுப் பரீட்சை – 2023**

**இலங்கை சட்டக் கல்லூரி (சாதாரண) நுழைவுப் பரீட்சைக்கு விண்ணப்பப் பத்திரம் சமர்ப்பிக்கும் போது தேவையான கல்வித் தகைமைகளை பூர்த்தி செய்ய இயலாத விண்ணப்பதாரிகளுக்கு சந்தர்ப்பம் வழங்கள்.**

பரீட்சைக்கான விண்ணப்பப் பத்திரம் சமர்ப்பிப்பதற்குத் தேவையான கல்வித் தகைமைகளை தற்போது கொண்டிராத விண்ணப்பதாரிகள், பின்வரும் நிபந்தனைகளுக்கு அமைவாக 2023 ஆகஸ்ட் மாதம் 16 ஆம் திகதி வரை நிகழ் நிலை ஊடாக விண்ணப்பப் பத்திரம் சமர்ப்பிப்பதற்கான சந்தர்ப்பம் வழங்கப்பட்டுள்ளது.

1. நிகழ் நிலை விண்ணப்பப் பத்திரத்தில் தமது பெறுபேறுகளை குறிப்பிடும் போது, தோற்றிய பாடங்களைக் குறிப்பிட்டு, பரீட்சை சுட்டெண்ணைக் குறிப்பிடுவது போதுமானதாகும்.

2. சட்ட நுழைவு பரீட்சையின் பெறுபேறுகள் வெளியிடப்படும் நிலையில் விண்ணப்பதாரிகள் தங்களது கல்வித் தகைமைகளை பூர்த்தியாக்கி இருக்க வேண்டியதுடன், உறுதிப்படுத்தப்பட்ட தங்களது பெறுபேற்று ஆவணங்களை இலங்கை சட்டக் கல்லூரியின் சட்ட நுழைவுப் பிரிவுக்கு வருகை தந்து ஒப்படைக்க வேண்டும்.

3. சட்ட நுழைவுப் பரீட்சைக்கு விண்ணப்பித்த பிறகு இலங்கை பரீட்சைத் திணைக்களத்தினால் உங்களுக்க வழங்கப்பட்டுள்ள குறியீட்டு இலக்கத்தை (Reference Number) தமது பெறுபேறுகளை சட்டக் கல்லூரிக்கு சமர்ப்பிக்கும் போது ஒப்படைக்க வேண்டும். (மேல் இலக்கம் 02 இன்படி செயற்படும் போது)

4. தமது உறுதி செய்யப்பட்ட கல்வித் தகைமைகளை மேல் இலக்கம் 02 இன் நிபந்தனையில் குறிப்பிட்டுள்ளது போன்று, சட்டக் கல்லூரிக்கு சமர்ப்பிக்க தவறும் பட்சத்தில், சட்ட நுழைவுப் பரீட்சைக்காக தங்களால் சமர்ப்பிக்கப்பட்ட விண்ணப்பம் செல்லுபடியற்றதாகும்.

5. எக்காரணத்தையிட்டும், சட்ட நுழைவுப் பரீட்சைக்காக செலுத்தப்பட்ட சட்டக் கல்லூரி கட்டணமும் பரீட்சைக் கட்டணமும் மீளச் செலுத்தப்படவோ அல்லது வேறொரு பரீட்சைக்காக மாற்றீடு செய்யப்படவோ மாட்டாது.

கல்லூரி அதிபர்
இலங்கை சட்டக் கல்லூரி
2023.08.12